மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 145/2016 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | தேவன் | நாள் | 10.01.2023 |
| தகப்பனார் பெயர் | கண்ணப்ப நாயுடு | | |

**1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

14) தாவா வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து விவரம் எனக்கு தெரியும், அதில் 32 செண்டுகளுக்கு தடம் தொடர்பாக குறிப்பிட்டுள்ளேன். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 கிரய ஆவணத்தில் சொத்து விவரத்தில் கிழமேல் 12 அடி, தென்வடல் 581 அடி என அளவு குறிப்பிட்டு எந்த தடவழியும் குறிப்பாக காண்பிக்கப்படவில்லை என்றால், சரிதான். என் தந்தை கண்ணப்பன் மேற்படி தடவழியை எனக்கு தனியாக 20 ரூபாய் பத்திரத்தில் எழுதி தருவதாக கூறி, தனியாக எழுதிக்கொடுத்துவிட்டார்.

15) என் தந்தை கண்ணப்பன் எனக்கு தனியாக 20 ரூபாய் பத்திரத்தில் தடவழி உரிமை எழுதிக்கொடுத்துள்ளார் என்ற விவரத்தை தாவா வழக்குரையிலோ, என் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்திலோ நான் சொல்லவில்லை என்றால், சரியல்ல. நான் சொல்லியுள்ளேன்.

16) அந்த பத்திரம் எந்த தேதியில் எழுதிக்கொடுக்கப்பட்டது என்ற விவரத்தையும் மேற்படி ஆவணம் பதிவு செய்யப்பட்ட ஆவணமா என்பது குறித்தும், என் வழக்குரையிலும், என் முதல் விசாரணை சாட்சியத்திலும் நான் சொல்லவில்லை என்றால், சரிதான். ஆனால் என் தந்தை எனக்கு மேற்படி தடவழியை 13.06.2000 ம் தேதியில் எழுதிக்கொடுத்துள்ளார்.

17) மேற்படி என் தந்தை எழுதிக்கொடுத்ததாக சொல்லும் பத்திரத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது போல் உண்மையில் எனக்கு என் தந்தை தடவழி எழுதிக்கொடுத்திருந்தால் வா.சா.ஆ.1 கிரய ஆவணத்திலேயே அதை குறிப்பிட்டு

எழுதியிருப்பார் என்றாலும், அவர் நான் சொல்வது போல் தனியாக மேற்படி தடவழியை குறிப்பிட்டு எந்த பத்திரமும் எழுதிக்கொடுக்கவில்லை என்றாலும், நானே மோசடியாக ஒரு பத்திரத்தை உருவாக்கிக்கொண்டு என் தந்தை எழுதிக்கொடுத்ததாக வழக்கிற்காக நான் அவ்வாறு பொய்யாக சொல்கிறேன் என்றாலும், சரியல்ல.

18) உண்மையில் நான் சொல்வது போல் என் தந்தை எனக்கு தடவழி தொடர்பாக ஏதேனும் பத்திரத்தை எழுதிக்கொடுத்திருந்தால், இவ்வழக்கை தாக்கல் செய்யும்போது வழக்குரையுடன் அந்த பத்திரத்தை நீதிமன்றத்தில் ஒப்படைத்திருப்பேன் என்றாலும், மேற்படி பத்திரத்தை பற்றி என் வழக்குரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லியிருப்பேன் என்றாலும், சரியல்ல.

19) வா.சா.ஆ.1 கிரய பத்திரத்தில் கண்டுள்ள சொத்தை நான் யாரிடமிருந்து கிரயம் பெற்றிருந்தேன் என்றால், என் தந்தை கண்ணப்பனிடமிருந்து கிரயம் பெற்றுள்ளேன். வா.சா.ஆ.1 கிரய ஆவணத்தில் 2–வது பக்கத்தில் 27.08.1993ம் தேதிய பத்திர எண்.732/1993 என குறிப்பிடப்பட்டுள்ள ஆவணத்தை எதையும் நான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால், தாக்கல் செய்துள்ளேன்.

20) நான் வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து விவரம் தவறானது என்றால், சரியல்ல. தாவா சொத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாதையை நான் எந்த காலத்திலும் உபயோகப்படுத்தியதில்லை என்றால், சரியல்ல.

21) இவ்வழக்கில் பிரதிவாதிகள் பதிலுரையில் கூறியுள்ள சங்கதிகளை பற்றி எனக்கு தெரியாது என்றால், சரிதான். எனக்கு எந்தெந்த சர்வே எண்களில் எவ்வளவு விஸ்தீரணத்தில் சொத்துக்கள் உள்ளது என்றால், ச.எண்.359ல் 3 ஏக்கர் நிலம் உள்ளது. அதே சர்வே எண்ணில் தற்போது இந்த வழக்கு சொத்தான 32 செண்ட் நிலம் உள்ளது.

22) மேற்படி ச.எண்.359ல் உட்பிரிவுகள் குறித்து என்னால் சொல்ல இயலாது என்றால், சரிதான். தாவா சொத்து 1, 2 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டு என்றாலும்,

எனக்கு அதில் எவ்வித உரிமையும் இல்லை என்று சொன்னாலும், சரியல்ல.

23) தாவா சொத்தாக குறிப்பிடப்பட்டுள்ள தடவழியாக நான் ஒருபோதும் சென்றதில்லை என்றாலும், அதில் நான் எந்த சமயத்திலும் வாகனத்தில் சென்று வந்ததில்லை என்றாலும், சரியல்ல.

24) எனக்கு ச.எண்.359/1B1 ல் இருந்து ச.எண்.359/1E வழியாக எனக்கு தனியாக வண்டிப்பாதை உள்ளது என்றால், சரியல்ல. மேற்படி வண்டிப்பாதையானது ச.எண்.359/1E வழியாக சென்று ச.எண்.373 ல் தென்வடலாக சென்று வெள்ளார் கிராம பிரதான சாலையை சென்றடைகிறது என்றால், சரியல்ல. ச.எண்.359/1F வழியாகத்தான் தடவழி உள்ளது.

25) நான் சொல்வதுபோல் ச.எண்.359/1F வழியாக தடவழி உள்ளது என கூறுவது தவறானது என்றால், சரியல்ல. நான் எனக்குள்ள தடவழியை மறைத்து இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

(1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/—திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.